DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 76/2023 Crime No. 57/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-4/LW21- திரு.கிருஷ்ணமூர்த்தி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 22.08.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் தற்பொழுது சேலம் மாநகரம், சூரமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். பவானி வட்டக் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 23.02.2023 தேதியன்று, காலை 07.00 மணிக்கு, பவானி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முருகேசன் என்பவர் நிலைய அலுவலிலிருந்தபோது பவானி அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற சோலைக் கவுண்டர் என்பவரது RTA இன்டிமேசனை பெற்று அங்கு சென்று பார்த்தபோது அவர் சிகிச்சையில் இல்லை என்ற விவரம் தெரிந்தது. பின்னர் 23.02.2023 ம் தேதியன்று, காலை 09.30 மணிக்கு, மேற்படி சோலைக் கவுண்டரின் மகன் செங்கோட்டையன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று காவல் நிலையக் குற்ற எண்.57/2023, இதச 279, 304(A) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை பெற்ற நிலைய உதவி ஆய்வாளர் திரு.அசோகன் என்பவர், அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று, சம்பவயிட சாட்சிகளான சதாசிவம் மற்றும் கார்த்திக் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு, பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு பவானி அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்துபோன சோலைக் கவுண்டர் என்பவரின் பிரேதத்தைப் பார்வையிட்டு, பஞ்சாயத்தார் முன்னிலையில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இறப்பின் காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை முநிகா. திரு.ராமலிங்கம் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். பின்னர் சாட்சிகள் செங்கோட்டையன், பவளக்கொடி, செல்வராஜ், சரவணன், சந்திரன், செந்தில்குமார், தங்கராசு, சதாசிவம் மற்றும் கார்த்திக் ஆகியோர்களை தனித் தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

பின்னர் தொடர் புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை 25.04.2023 ம் தேதியன்று நான் சம்பவயிடம் சென்று பார்வையிட்டபோது சம்பவயிடம் மாதிர் வரைபடத்துடன் ஒத்திருந்ததால்

புதியதாக எதுவும் தயார் செய்யவில்லை. சாட்சிகளை விசாரித்தபோது மேற்படி உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால், புதியதாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பின்னர் 17.05.2024 ம் தேதியன்று, TN 36 U 2134 மற்றும் TN 38 AJ 9657 ஆகிய விபத்தில் தொடர்புடைய வாகனங்களின் ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். சாட்சி சுரேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 18.05.2023 ம் தேதியன்று, நிலையம் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி மணிகண்டன் என்பவரை கைதுக்கான காரணம் கூறி, கைது செய்து, தக்க நிலைய பிணையில் விடுவித்தேன்.

பின்னர் 19.05.2023 ம் தேதியன்று, TN 38 AJ 9657 வாகனத்தின் உரிமையாளர் விவரம் கேட்டு கோவை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்னர் 22.05.2023 ம் தேதியன்று, சாட்சி சிவகுருநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 23.05.2023 ம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். TN 36 U 2134 **என்ற பதிவெண் கொண்ட TVS XL ன் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் மற்றும்** TN 38 AJ 9657 **என்ற பதிவெண் கொண்ட யமாஹா பைக்கின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சி முனுசாமியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.**

பின்னர் பவானி அரசு மருத்துவமனையில் முனுசாமி, சோலைக்கவுண்டர் மற்றும் மணிகண்டன் ஆகியோருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடுகள் மற்றும் இன்டிமேசன் கொடுத்த மற்றும் சோலைக் கவுண்டர் இறப்பை உறுதி செய்து இறப்பு இன்டிமேசன் கொடுத்த மருத்துவர் திரு.செந்தில்நாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **முனுசாமியின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும், மணிகண்டனின் விபத்து பதிவேடு அ.சா.ஈ.9 ஆகவும், சோலைக் கவுண்டரின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் பவானி சுதா மருத்துவமனைக்கு சென்று முனுசாமியை சிகிச்சைக்கு அனுமதித்து விபத்து பதிவேடு தயார் செய்த மருத்துவர் திரு. திருவேங்கடலட்சுமணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி மருத்துவமனை வழங்கிய முனுசாமியின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.11 ஆகவும் பின்னர் முனுசாமிக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கிய மருத்துவர் திரு.ஜான்குருபாதன் என்பவரை விசாரித்து** வாக்குமூலம் பதிவு செய்தேன். காயச்சான்று அ.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரையும், பிரேத பரிசோதனை அலுவல் பார்த்த முதல்நிலை காவலரையும் மற்றும் முதல் கட்ட புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளரையும் விசாரித்தும், சாட்சி செங்கோட்டையனை மறு விசாரணை

செய்தும் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் சாட்சி முனுசாமிக்கு வழங்கிய காயச்சான்று அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் சான்று வழங்கியதாலும், எதிரியின் வாகனத்திற்கு பதிவு சான்று மற்றும் காப்பு சான்று இல்லாததாலும், எதிரிக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததாலும் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை இதச. 279, 304(A) லிருந்து இதச 279, 338, 304(A) of IPC மற்றும் 192, 196, 3 r/w 181 of MV Act என மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து 23.05.2023 ம் தேதியன்று, எதிரி மீது இதச 279, 338, 304(A) of IPC மற்றும் 192, 196, 3 r/w 181 of MV Act ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கூறுகிறேன் இந்த விபத்து எதிரியின் அஜாக்கிரதையால் நடக்கவில்லை என்று சொன்னாலும், வாகன இழப்பீடு பெறுவற்காக வாதி அளித்த பொய் புகாரை சரிவர விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்று சொன்னால், சரியல்ல.